

கழகத் துணைப் பொதுச் செயலாளர், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களை பொறியாளர் அணியின் விழுப்புரம்,கடலூர், புதுச்சேரி மண்டல பொறுப்பாளராகப் பொறுப்பேற்றுள்ள மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் சி.பிரதீப் சந்தித்து வாழ்த்து பெற்றார்.உடன் விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகள் அமைப்பாளர் புகழ் செல்வகுமார்,தலைவர் எஸ்.சுரேஷ்,துணைத் தலைவர் வி.கிருஷ்ணமூர்த்தி, துணை அமைப்பாளர்கள் துரை ஸ்டாலின், எம்.பிரசாத், டி.டி.செந்தில்குமார், பி.ஆனந்தகுமார்,ஏ. ரீகன்ராஜ் உள்ளிட்டோர் உள்ளனர்.



சென்னை தீவுத் திடலில் 06.01.2025 அன்று தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற 49வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியினை சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் திறந்து வைத்து அரங்குகளை பார்வையிட்டார்கள். இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் டாக்டர் பி.சந்தரமோகன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ் குமார், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில்

# 49வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி - 2025!

## அமைச்சர்கள் ஆர்.இராஜேந்திரன் - மா.சுப்பிரமணியன் - பி.கே.சேகர்பாபு திறந்து வைத்தனர்!

சென்னை, ஜன.8 -

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் தீவுத்திடலில் 49-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியினை அமைச்சர்கள் ஆர்.இராஜேந்திரன், மா.சுப்பிர மணியன், பி.கே.சேகர்பாபு ஆகியோர் திறந்து வைத்தனர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் 1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசாங்கத்தின் நலத்திட்டங்கள் மக்களிடம் கொண்டு சேர்க்கப்பட வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் முதலாவது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி தொடங்கப்பட்டு கடந்த 48 ஆண்டுகளாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு சொந்தமான சென்னை தீவுத்திடலில் நடைபெற்று வருகிறது.

இந்த ஆண்டு 49வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியினை நடத்துவதற்கு தமிழ்நாடு அரசு அனுமதி அளித்து, அரசுத் துறை அரங்கங்கள் அமைக்க ருபாய் 1.47 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

அதன்படி சுற்றுலாத்துறை, காவல்துறை, விளையாட்டுத்துறை, இந்து சமய அறநிலையத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, கல்வித்துறை. நான் முதல்வன். வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, மின்சாரத்துறை, தியணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை. நீர்வளத் துறை.மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, வருவாய்த்துறை. சிறுசேமிப்புத்துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணையக்குழு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் உள்ளிட்ட 41 மாநில அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங் களின் அரங்குகள், ஒரு வெளிமாநில அரங்கு (கர்நாடகா சோப்). இரண்டு ஒன்றிய அரசின் அரங்குகள் (சென்னை துறை முகம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேசன்) உள்பட 44 அரங்குகள் சிறப்பான முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் இப்பொருட்காட்சியில் 110 சிறிய கடைகள் மற்றும் 30 தனியார் அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளது. டெல்லி அப்பளம், பஜ்ஜி, ஐஸ்கிரிம், கரும்புசாறு, பானி பூரி, பால்கோவா, காலிபிளவர் பக்கோடா, சோளா பூரி போன்ற சிற்றுண்டி உணவகங்களும் இடம்பெற்றுள்ளது. அறுசுவை உணவு உண்டு மகிழ்ந்திட ஓட்டல் தமிழ்நாடு உணவகமும் உள்ளது. இப்பொருட்காட்சி நடத்துவதன் மூலம் நேரடியாக சுமார் 6,000 நபர்களும், மறைமுகமாக சுமார் 30, 000 நபர்களும் வேலைவாய்ப்பை பெறுவார்கள்.

மேலும், 80,000 சதுர அடி பரப்பளவில் பொழுது போக்கு வளாகம் அமைக்கப்பட்டு அதில் 30க்கும் மேற்பட்ட இதுவரை பார்த்திடாத, விளையாடி (Tsunami, Chapsuel, Tora Tora, Giant wheel, Swing Chair, Octopus, Techno Jump, Screen Tower, Wind Mill and China Salambo) அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இராட்சத சாகச விளையாட்டு சாதனங்கள், சிறுவர் விளையாட்டு சாதனங்கள் மற்றும் நவீன கேளிக்கை சாதனங்கள் மக்கள் மனதை கவரும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. சிறுவர் இரயில், பனிக்கட்டி உலகம், அவதார் உலகம், கடற்கன்னி ஷோ, மீன் காட்சியகம், மிரள வைக்கும் பேய் வீடு, பறவைகள் காட்சி, 3D தியேட்டர், அறிவியல் உலகம் போன்ற பொழுது போக்கு அம்சங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பொருட்காட்சியின் நுழைவுக் கட்டணம் பெரியவர்களுக்கு ரூ.40/- சிறுவர்களுக்கு (4 வயது முதல் 10 வயது வரை) ரூ.25/- மாணவ, மாணவியர்களுக்கு (சலுகைக் கட்டணம்) ரூ. 25/-.

**பொருட்காட்சி நேரம்:-** திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை அலுவலக நாட்களில் மாலை 3.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை.

சனி, ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாட்களில் காலை 11.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை.

மேலும், பொருட்காட்சி நுழைவுச்சீட்டினை வரிசையில் நின்று வாங்க முடியாதவர்களுக்கு வசதியாக டிஜிட்டல் தொழில்நுட்பம் "UPI Payment Methods" மூலம் பணம் செலுத்தி எளிதில் நுழைவுச்சீட்டினை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. , www.ttdcfair.com, PayTm insider, Bookmyshow C வழி சேவை அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இதனால் பார்வையாளர்கள் தங்களது வீட்டில் இருந்தபடியே தங்களின் வசதிக்கேற்ற நாளில் பொருட் காட்சி நுழைவுச் சீட்டுனை முன்பதிவு செய்ய கொள்ளலாம்.

பொருட்காட்சிக்கு வருகை தரும் பொதுமக்கள் வசதிக்காக குடிநீர், கழிப்பிடம், தாய்மார்கள் மற்றும் முதியோர்கள் ஓய்வறை வசதிகள் செய்யப்பட்டுள்ளது. பொருட்காட்சிக்கு வருகை தரும் பொதுமக்கள் வசதிக்காக சென்னை நகரின் முக்கிய பகுதிகளிலிருந்து அரசுப் பேருந்துகள் கூடுதலாக சுற்றுலாப் பொருட்காட்சிக்கு இயக்க சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு சுமார் 9 லட்சத்திற்கும் அதிகமான பொதுமக்கள் பொருட்காட்சியை கண்டுகளிப்பார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

அதன்படி, நேற்று (06.01.2025) சென்னை தீவுத் திடலில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் நடைபெறும் 49-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியினை சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் டாக்டர் பி.சந்தரமோகன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ் குமார், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் ஜெயபுரம் பகுதியில் உள்ள தி.மு.க. விழுப்புரம் வடக்கு மாவட்ட அலுவலகத்தில் மாற்றுக் கட்சிகளில் இருந்து திமுகவில் இணையும் நிகழ்ச்சி நடைபெற்றது. மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன் ஏற்பாட்டில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் திண்டிவனம் அடுத்த பெருமுக்கல், ஆலங்குப்பம், வன்னிப்பேர் உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த பா.ம.க., அ.தி.மு.க., நா.த.க. உள்ளிட்ட மாற்று கட்சியைச் சார்ந்த கட்சிகளில் இருந்து 100க்கும் மேற்பட்டோர் திமுகவில் இணைந்தனர். இதில் மாவட்டப் பொருளாளர் ரமணன், ஒன்றியச் செயலாளர்கள் ராஜாராம், அண்ணாதுரை, இளம்வழுதி, மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி அமைப்பாளர் தமிழரசன், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை தலைவர் கன்னியப்பன், மாவட்டப் பிரதிநிதிகள் ராஜாராம், வடிவேல்,பாபு, தொழிலாளர்கள் துணை அமைப்பாளர்கள் பன்னீர், முருகன் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் பிரகாஷ், சுந்தர், சுரேந்தர், ராமகிருஷ்ணன், விநாயகம், செந்தில், எழில், சக்திவேல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ஆளுநரைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்!



தமிழக சட்டசபையின் மாண்பை சீர்குலைக்கும் வகையிலும் மற்றும் தமிழ்நாடு முன்னேற்றத்தில் தடையாக இருக்கும் ஆளுநர் ஆர்.என். ரவியைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் விழுப்புரம் தெற்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், தயா இளந்திரையன், இரா.கற்பகம், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் மு.தங்கம், மாநில மகளிர் அணி பிரச்சார குழுச் செயலாளர் எம்.தேன்மொழி, தலைமை கழக வழக்கறிஞர் சுவை சுரேஷ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.செல்வராஜ், கோ.பாஸ்கரன், நகரச் செயலாளர் இரா.சக்கரை உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் , அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் ஆளுநர் ஆர்.என்.ரவியைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் பேரறிஞர் அண்ணா சிலை அருகே தொகுதி மேர்பார்வையாளர் முனைவர் சபாபதிமோகன் தலைமையில் ஆர்ப்பாட்டம் உடன் கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக செயலாளர்கள், கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாட்டில் அத்துமீறும் ஆளுநர் ரவியைக் கண்டித்து நாகையில் அவுரி திடலில் நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் நாகை மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன், தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



கரூர் தலைமை தபால் நிலையம் அருகில், கரூர் மாவட்ட கழகத்தின் சார்பில், அத்துமீறும் ஆளுநரை கண்டித்தும் அதற்கு துணை போகும் அதிமுக, பாஜக கள்ள கூட்டணியை கண்டித்தும், மாபெறும் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட கழக செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சருமான வி. செந்தில் பாலாஜி வழிகாட்டுதலில் நடைபெற்றது. மாவட்ட கழக அவை தலைவர் டி. ராஜேந்திரன் தலைமை வகித்தார். மாநில நெசவாளர் அணித்தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத்துறை இணைச் செயலாளர் என் மணிராஜ், நெசவாளர் அணி செயலாளர் பரணி மணி, மாநில சிறுபான்மை பிரிவு இணைச்செயலாளர் முனவர் ஜான், மாநில கொள்கை விளக்க துணைச்செயலாளர் கரூர் முரளி, மாநகர செயலாளர் எஸ்.பி.கனகராஜ், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள் நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், வார்டு கிளைக் கழக நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். பகுதி கழக பொறுப்பாளர் விஜிஎஸ்.குமார் நன்றியுரை கூறினார்.




தமிழ்நாட்டில் அத்துமீறும் ஆளுநரையும், அவரை காப்பாற்றும் அ.தி.மு.க., பா.ஜ.க. கள்ளக் கூட்டணியையும் கண்டித்து நாமக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நாமக்கல் மோகனூர் சாலை பி.எஸ்.என்.எல். அலுவலகம் முன்பு நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமையில் நடைபெற்றது. நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலை வகித்தார். இக்கூட்டத்தில் நாமக்கல் மாநகராட்சி மேயர் கலாநிதி, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் கழகத் தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்